**( Common for Both Pupil and Private candidates )**

| Register Number | | | | | | |
|---|---|---|---|---|---|---|

# தமிழ் - முதல் தாள்
# Language – Part A – TAMIL – Paper I

( New / Old Syllabus )

நேரம் : $2\frac{1}{2}$ மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

*குறிப்பு :* i) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் இருத்தல் வேண்டும்.

ii) வினா எண் IV க்குச் செய்யுள் வடிவில் விடை எழுதுதல் வேண்டும்.

I. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் **எட்டனுக்கு** மட்டும் (ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளுக்கு மிகாமல்) விடை எழுதுக : $8 \times 2 = 16$

1. ஏன் அறநெறி ஓங்குதல் வேண்டும் ?

2. சினம் எவற்றைக் கொல்லும் ?

3. பிறர் தன்னைப் புகழுங்கால் யாது செய்தல் வேண்டும் ?

4. சிலம்பு உணர்த்தும் மூன்று நீதிகளைக் குறிப்பிடுக.

5. இராவணன் தோன்றிய சோலை எத்தகையது ?

6. கடலின் கவின்மிகு காட்சி யாது ?

7. நன்மாறன் பகைவர்க்கும் பாவலர்க்கும் எத்தகையோன் ?

[ Turn over

8. பாணனின் பாட்டைக் கேட்டு அன்னையும் தோழியும் யாது கூறினர் ?

9. பாரத பூமி எத்தகைய பூமி ?

10. பிளந்தார், அளந்தார் எவற்றை ?

II. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் (ஒவ்வொன்றிற்கும் ஆறு வரிகளுக்கு மிகாமல்) விடை எழுதுக : $3 \times 5 = 15$

11. நாமக்கல் கவிஞர் தமிழை எவ்வாறு வாழ்த்துகிறார் ?

12. திரு.வி.க. பற்றிக் குறிப்பு வரைக.

13. புகழின் சிறப்பினைக் கூறுக.

14. கொலையாளிகளின் கொடுஞ்செயல்களை விவரி.

15. திருவேங்கடத்து இறைவனை நம்மாழ்வார் எங்ஙனம் போற்றியுள்ளார் ?

III. கீழ்க்காணும் வினாக்களுள் ஏதேனும் **ஒன்றனுக்கு** மட்டும் பதினைந்து வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக : $1 \times 7 = 7$

16. ஊக்கமே சிறந்தது என்பதையும் அதனை உடையாரது உயர்ச்சியையும் விளக்குக.

17. அசோக வனத்தில் அனுமன் சீதையைக் கண்டு, துணிந்து, மகிழ்ந்த வரலாற்றைத் தொகுத்து எழுதுக.

18. குமரகுருபரர் மீனாட்சியம்மையினை எவ்வாறு சிறப்பித்துள்ளார் ?

19. சுற்றுப்புறச் சூழலைக் காத்திடுவோம் என்னும் தலைப்பில் கவிஞர் பூங்கோவன் குறிப்பிடும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

IV. பின்வருவனவற்றை அடிபிறழாமல் எழுதுக :

20. 'உடையர்' எனத் தொடங்கும் குறளையும், 'உயிர்க்கு' என முடியும் குறளையும் எழுதுக. 2 + 2 = 4

21. அ) 'நாடெலாம் வளர' எனத் தொடங்கும் இறை வாழ்த்துப் பாடலை எழுதுக. 3

ஆ) 'வீடின தன்றறன்' எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடலை எழுதுக. 3

V. கீழ்க்காணும் **அனைத்து** வினாக்களுக்கும் விடை எழுதுக : 10 × 1 = 10

22. இசை என்னும் சொல்லின் பொருள் – புகல்/புகழ்

இதில் காணும் மயங்கொலிப் பிழையை நீக்கி எழுதுக.

23. 'நெடும் புனலுள் வெல்லும் முதலை' எனக் கூறுவது

அ) கம்பராமாயணம் ஆ) சிலப்பதிகாரம் இ) திருக்குறள்.

24. நிலவரை நீள்புகழ் ஆற்றின் புலவரைப்

போற்றாது புத்தே ளுலகு. – சீர் பிரித்து எழுதுக.

25. மண்தேய்த்த புகழினான் – இத்தொடரில் சுட்டப் பெற்றுள்ளவன்

அ) இராமன் ஆ) அனுமன் இ) கோவலன்.

26. 'எந்தாய் இன்னதென அறிகில்லார் தாம்செய்வது' – யார் யாரிடம் கூறியது ?

27. வேங்கடமாமலை என்னும் தொடரைப் பிரிக்கும் முறை .................. ,

அ) வேங்கடம் + மா + மலை

ஆ) வேங்கட + மா + மலை

இ) வேங்கடன் + மா + மலை.

[ Turn over

28. 'வேரல் வேலி வேர்க்கோட் பலவின்'

இத்தொடரில் .................. அமைந்துள்ளது.

அ) எதுகை

ஆ) மோனை

இ) இயைபு.

29. பொருத்துக :

| சொல் | | பொருள் |
|---|---|---|
| நறை | — | பெண் யானை |
| பிடி | — | மாலை |
| | — | தேன். |

30. சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக :

திருமால் மூன்றடியால் உலகை ........................ . ( அளந்தார்/அலந்தார் )

31. பூக்களில் இருப்பது ........................ . ( மனம்/மணம் )

VI. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் **ஐந்தனுக்கு** மட்டும் (ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளுக்கு மிகாமல்) விடை எழுதுக : **5 × 2 = 10**

32. இந்தியாவின் தேவைகளென அப்துல் கலாம் குறிப்பிட்டுள்ளவை யாவை ?

33. இரகுநாத சேதுபதியின் அன்பில் வளர்ந்த புலவர்கள் யாவர் ?

34. செய்ந்நன்றி மறவாமைக்கு வ.உ.சி. எடுத்துக்காட்டும் திருக்குறள் யாது ?

35. பெரியாரின் சீரிய கருத்துகள் எவற்றைப் பயிரிட உதவுகின்றன ?

36. குடும்பத்தில் பிறக்கும் உயர்ந்த குணங்கள் யாவை ?

37. திருநெல்வேலிச் சீமையின் சிறப்பு யாது ?

38. புகழ்பாடச் சொன்ன புல்லர்களாகக் குறிப்பிடப்படுவோர் யாவர் ?

VII. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் (ஒவ்வொன்றிற்கும் ஆறு வரிகளுக்கு மிகாமல்) விடை எழுதுக : $3 \times 5 = 15$

39. ஒரு நாட்டின் உள்வளத் திறமைகள் யாவை ?

40. எவற்றை மேன்மேலும் படிக்க வேண்டுமென மு.வ. விரும்புகிறார் ?

41. பெரியாரோடு பிறந்த இரண்டு நல்லுணர்வுகளை விளக்குக.

42. ஔவையார் தம்வாய் யார்யாரைப் பாடியதாகக் கூறிப் பெருமைப்படுகிறார் ?

43. மனையியல் கல்வியின் இன்றியமையாமையை எழுதுக.

VIII. கீழ்க்காணும் வினாக்களுள் ஏதேனும் **ஒன்றனுக்கு** மட்டும் (பதினைந்து வரிகளுக்கு மிகாமல்) விடை எழுதுக : $1 \times 7 = 7$

44. குடியரசுத் தலைவரின் பார்வையில் பாக்கியசாலிகள், துர்பாக்கியசாலிகள், அரைகுறைப் பாக்கியசாலிகளாகக் கருதப்படுபவர்கள் யார் ? யார் ?

45. அனந்த கவிராயர் பாட்டுக்கும் பேச்சுக்கும் பரிசு பெற்ற நிகழ்ச்சியைத் தொகுத்து எழுதுக.

46. வ.உ.சி. அவர்களின் செய்ந்நன்றி மறவாப் பண்பினை விளக்கி எழுதுக.

47. 'ஔவையாரே பாஸ்கலுக்கு முன்னோடி' என்பதை விளக்குக.

IX. கீழ்க்காணும் அனைத்து வினாக்களுக்கும் விடை எழுதுக : 10 × 1 = 10

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக :

48. 2010 ஆம் ஆண்டிற்கு முன்னதாகவே இந்தியாவிலிருந்து ஒழிக்கப்பட வேண்டியது ..................... .

அ) கல்லாமை

ஆ) வறுமை

இ) வேலையில்லாத் திண்டாட்டம்.

49. கோடிட்ட இடத்தைத் தகுந்த சொல்லால் நிரப்புக :

காவியங்கள் போக மற்றக் கலைகளெல்லாம் உலகிலுள்ள அனைவருக்கும் ..................... .

50. ஆண் மான் என்னும் பொருள் தரும் சொல் :

அ) கழை ஆ) களை இ) கலை.

51. கீழ்க்காணும் வாக்கியம் எவ்வகை வாக்கியம் ?

சிதம்பரனார் செய்ந்நன்றி மறவாச் செம்மல்.

52. கீழ்க்காணும் தொடரிலுள்ள சந்திப் பிழையை நீக்குக :

பளிங்கு பொருளில் ஒளி ஊடுருவும் தன்மையை சாத்தனார் கண்டார்.

53. கீழ்க்காணும் உவமைத் தொடர்களை உருவகத் தொடர்களாக மாற்றுக :

அ) வேல்விழி ஆ) தேன் தமிழ்.

54. பொருத்தமான வேற்றுமை உருபைச் சேர்த்து எழுதுக :

மனிதன் ......... ஆக்குவதும் அழிப்பதும் அவன் சூழ்நிலை.

( கு, ஆல், ஐ கண் )

55. கீழ்க்காணும் சொற்களுள் இருபொருள் தரும் ஏதேனும் ஒரு சொல்லை எழுதி, அச் சொல் தரும் இரு பொருளையும் எழுது.

அ) ஆறு ஆ) நூல்

இ) எழில் ஈ) மதி.

56. கீழ்க்காணும் தொடரில் காணப் பெறும் ஒருமை பன்மைப் பிழையை நீக்குக :

அறிவியல் அறிஞர்கள் அறிந்திருந்தார்.

57. கீழ்க்காணும் தொகைச் சொற்களுள் ஏதேனும் ஒன்றினை விரித்து எழுதுக :

அ) இருதிணை ஆ) முக்கனி.